# உதயன்

சுடர் : 40
கதிர் : 355

திங்கட்கிழமை
17 நவம்பர் 2025

கார்த்திகை 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50




## நெடுந்தீவில் துப்பாக்கி மீட்பு

யாழ்ப்பாணம், நவ.17
நெடுந்தீவில் பாவனையற்ற காணி ஒன்றிலிருந்து துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் 11



# திருமலையில் சட்டவிரோதமாக பௌத்த மதத்தலக் கட்டுமானம்

## இரவோடு இரவாக அமைக்க முயற்சி
## அதிகாரிகள், ஊடகவியலாளர்களுக்கு மிரட்டல்

திருகோணமலை, நவம்பர் 17
திருகோணமலை பிரட்ரிக் கோட்டை டச்பே கடற்கரையோரமாக நேற்று சட்டவிரோதமான முறையில் விகாரைக் கட்டுமானப் பணிகள் பிக்குகள் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு, நேற்று இரவோடு இரவாக புத்தர் சிலையொன்றும் அங்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 04

## இந்தியாவுக்குச் செல்லவுள்ள ஜே.வி.பி. பொதுச்செயலாளர்

### இராஜதந்திரக் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம்



கொழும்பு, நவ.17
மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எதிர்வரும் டிசெம்பர் மாதத்தின் முதல்வாரத்தில் இந்தியாவுக்கு 3 நாள் உத்தியோக 11

## மைத்ரி பட்டமளிப்பு விழாவின் அழைப்புக்கடிதம் உண்மையா?

### பிரிட்டன் சென்று விசாரிக்கும் புலனாய்வுப் பிரிவின் குழு

கொழும்பு, நவ.17
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு லண்டன் Wolverhampton பல்கலைக்கழகத்தால் அனுப்பட்டது என்று கூறப்படும் கடிதத்தின் நம்பகத்தன்மை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பான விசாரணைகளுக்காக ஐவரடங்கிய 11

## பாடசாலை, பல்கலைகளில் போதைத் தடுப்புக் குழுக்கள்!

### இன்று வெளியாகவுள்ள சுற்றறிக்கை



கொழும்பு, நவ.17
நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை அமைப்பதற்கான சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் 11

## வடக்கு, கிழக்கில் மழை தொடரும்

யாழ்ப்பாணம், நவ.17
நாட்டுக்கு அருகில் நிலவும் தாழமுக்க நிலைமையால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் மழையுடனான காலநிலை சில தினங்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. 11

## அநுர – தமிழரசு கட்சி இந்த வாரம் சந்திப்பு!

கொழும்பு, நவ.17
ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்கவுக்கும், இலங்கை தமிழரசுக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 19 அல்லது 20 ஆம் திகதியளவில் நடைபெறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர், பதில் செயலாளர் மற்றும் 11



## போதைப்பொருளுடன் யாழில் இளைஞன் கைது



யாழ்ப்பாணம், நவ.17
ஹேஷிஷ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் வைத்து 27 வயது இளைஞர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் 11

முச்சந்தி முரளி

## 350 வகை மருந்துகள் விலைக் குறைப்பு

விரிவு பக்கம்:-05




## அரசின் மீதான நம்பிக்கையாலேயே பட்ஜெட்டை எதிர்க்கவில்லை தமிழரசு

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, நவ.17
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்கு தீர்வைக் காணலாம் என்ற எதிர்பார்ப்பு இருப்பதாலேய வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்காமல் இலங்கை தமிழரசுக் கட்சி விலகி இருந்தது என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் 11

## தொழிற்சங்க நடவடிக்கையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, நவ.17
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளது. 11

மக்கள் ம... ...ழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 16.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4257 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 27 44 54 57 |
| விசேட எழுத்து | Q |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 16.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1324 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 19 27 53 54 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 16.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0283 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 0 3 9 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 16.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2363 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 09 23 30 41 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 16.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6015 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 1 6 5 2 9 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 16.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2045 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 06 28 49 67 |
| விசேட எழுத்து | V |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 16.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0131 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 26 67 |

# தமிழரின் தனித்துவத்தைக் காப்பதற்கு மாகாணசபை அதிகாரங்கள் அவசியம்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், நவ.17

**மாகாணசபைத் தேர்தல் மட்டுமே தமிழர்களுக்கு ஒரு சில உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடியது. அது இல்லாவிட்டால் சிங்களவரிடம் இருந்து கிடைக்கப்போவது மாகாண சபை முறைமையிலும் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட ஒரு முறைமையே. இதனை வலியுறுத்த தமிழ்க்கட்சிகள் ஒற்றுமைப் படாது. இந்தியா அதுபற்றிப் பேசவில்லை எனக் கூறுவது மடமையே.**

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல்கள் வேண்டுமா? இல்லையா? என்று முதலில் முடிவெடுக்கவேண்டியவர்கள் தமிழ்த் தேசியக்கட்சிகளே. அவர்களுள் ஒற்றுமை இல்லாதபோது இந்தியா அது பற்றிப் பேசாதிருப்பதை நாம் பிழையென்று கூறமுடியாது.

முதலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுசேர்ந்து தற்போதைக்கு மாகாணசபைத் தேர்தல் உடனே நடத்தப்படவேண்டும் என்ற முடிவை எடுக்கவேண்டும். இன ரீதியாக இந்த நாட்டை ஆள நினைக்கும் ஒரு மனித அலகு தமது அதிகாரத்தைக் குறைக்கும் அளவுக்கு நடந்துகொள்வார்களா? என்று நாம் சிந்திக்கவேண்டும். மாகாணசபைகள் கலைக்கப்பட்டு ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. ஒரு ஜனநாயக நாடு எனப்படும் இந்த நாட்டில், மாகாண சபைத் தேர்தல் முறைமை எவ்வாறு அமையவேண்டும் என்ற கேள்வியை எழுப்பி, தேர்தல்கள் ஏழு வருடங்கள் தள்ளிவைக்கப் பட்டுள்ளன.

மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்று எமது தனித்துவம் வலியுறுத்தப்படாவிட்டால் நாம் சிங்கள மேலாதிக்கத்தின்கீழ் தொடர்ந்திருக்க நேரிடும். காலக்கிரமத்தில் எமது தனித்துவம் அழிந்துபோய்விடும்.

சிங்களக் கட்சியொன்று வடக்கு-கிழக்கில் தேர்தல்களில் வெல்ல முடியாது என்று இறுமாப்புடன் சொன்ன எங்களுக்கு அண்மையில் நடந்த கதி என்ன? ஆகவே இருப்பதைக் கைவசம் வைத்து எமது உரிமைகளை விரிவுபடுத்திச் செல்வதே எமக்கிருக்கும் ஒரேயொரு வாய்ப்பு. எனவே இப்போதுள்ள நிலையில் மாகாணசபைத் தேர்தல் மட்டுமே தமிழர்களுக்கு ஒரு சில உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பது. அது இல்லாவிட்டால் சிங்களவரிடம் இருந்து கிடைக்கப்போவது மாகாணசபை முறைமையிலும் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட ஒரு முறைமையேயாகும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 16.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0723 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| Z | 2 5 6 9 1 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2989 | D | 06 08 28 74 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 23 34 45 49 | 5150 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0819 | 02 04 26 | |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 01 45 54 57 | 4701 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 16.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 37 | 06 27 44 47 | 2165 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 07 42 53 54 | 2815 |

# ஹாட்லியின் மைந்தர்களின் 26ஆவது நினைவு இன்று!

கொழும்பு, நவ.17

ஹாட்லியின் மைந்தர்களது 26ஆம் ஆண்டு நினைவுநாள் வடமராட்சி இன்பர்சிட்டிக் கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர்கள் மற்றும் நண்பர்களால் இன்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. யாழ்.ஹாட்லிக் கல்லூரியின் 2000ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களான பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவி சங் கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன் மற்றும் பாலகிருஸ்ணன் பிரதீபன் ஆகிய நான்கு பேரும் கல்விச் செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்பகுதியில் 1999ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாகக் கல்வி கற்றுவந்தவேளை புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம் குணரட்ணத்தின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் இன்று காலை 9 மணியளவில் வடமராட்சி இன்பர்சிட்டிக் கடற்கரையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ச-100)



# தென் மாகாண ஆளுநர் மறைவு

கொழும்பு, நவ.17

தெற்கு மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர திடீர் சுகவீனம் காரணமாக தனது 62ஆவது வயதில் காலமானார்.

நோய் நிலைமை காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவர் சிரேஷ்ட நிர்வாக அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன், அவர் அமைச்சுச் செயலாளர், மாவட்டச் செயலாளர் மற்றும் பல அரச நிறுவனங்களின் தலைவர் பதவிகள் உட்பட பல பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# வட்டி இல்லா மாணவர் கடன் விண்ணப்பங்கள் கோரல்!

கொழும்பு,நவ.17

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் வட்டி இல்லாத மாணவர் கடன் திட்டத்தின்கீழ் பட்டப்படிப்புகளைக் கற்க மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# தோட்டத்தொழிலாளர் ஊதியம்: அதிகரிக்காவிடின் எதிர்ப்போம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.17

தற்போதைய அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி ஊதியத்தை அதிகரிக்கவில்லை என்றால் அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் சார்பாக அரசாங்கம் முன்வைக்கும் எந்தவொரு நல்ல திட்டத்தையும் நாங்கள் ஒருபோதும் எதிர்க்கமாட்டோம்.

தோட்டத்தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற வகையில் 2026 வரவு - செலவுத் திட்ட இரண்டாவது நிலை வாசிப்பில் ஆதரவாக வாக்களித்தோம், வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருந்து வெளியேறும் திட்டம் இல்லை. கூட்டணி உறவு தொடரும் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறையில்

# கிருமித்தொற்று அபாயத்தில் வெள்ளத்தினுள் வியாபாரம்

## சுகாதார அதிகாரிகள் ஆய்வு

யாழ்ப்பாணம், நவ.17

**பருத்தித்துறை மரக்கறிச்சந்தை கட்டட வளாகத்துக்குள் தேங்கிநிற்கும் மழை வெள்ளத்தின் காரணமாக சுகாதாரச் சீர்கேடு மற்றும் கிருமித்தொற்று அபாயம் ஏற்படுவது தொடர்பில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினர் கடந்த சனிக்கிழமை ஆய்வு நடத்தியுள்ளனர்.**

பருத்தித்துறை நகரசபைத் தவிசாளரால் புதிய நவீன சந்தைக் கட்டடத்தொகுதி பூட்டப்பட்ட நிலையில் பழைய மரக்கறிச் சந்தையிலேயே வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் உள்ள மரக்கறி சந்தை வளாகத்துக்குள் மழை வெள்ளம் தேங்கிநின்று வருவதனால் வியாபார நடவடிக்கைகளை வியாபாரிகள் தொடர முடியாத நிலை காணப்படுகின்றது. இந்தநிலையில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட கள ஆய்வில் சந்தை வளாகத்தில் தரைத் தளத்துக்கு சமாந்தரமாக மலசலக் குழி அமைக்கப்பட்டுள்ளமை, ஆழ்துளைக் கிணற்றினுள் மழை வெள்ளம் உட்சென்றுகொண்டிருந்தமை, வீதியால்செல்லும்மழை வெள்ளம் சந்தை வளாகத்துக்குள் உட்புகுந்து தேங்கும் நிலை என்பன அவதானிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் வீதியால் செல்லும் மழை வெள்ளத்துடன் அருகாமையில் உள்ள மீன் சந்தைக் கழிவுநீர் மற்றும் வீடுகள், வீதிகளில் உள்ள நாய் உள்ளிட்ட பிராணிகளின் கழிவுகள் என்பன கலந்து வருகின்றமையால் சந்தைக்கு வரும் பொதுமக்களுக்குக் கிருமித் தொற்று ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்று பொதுமக்களும் வியாபாரிகளும் சுட்டிக்காட்டினர் .(ச-100)

## பொலித்தீன் பைகளுக்கு பதிலாகக் காகிதப் பைகள்!

கொழும்பு,நவ.17

பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த காகிதப்பைகளை உற்பத்தி செய்யுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பொருள்களை வாங்கும்போது பொலித்தீன் பைகளுக்கு காசு அறவிடும் முடிவு குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பில் சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினர் அமைச்சகத்துக்குப் பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொலிஸாருக்கு 'டிமிக்கி' சிக்கினார் சந்தேகநபர்!

கிளிநொச்சி, நவ.17

பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் ஆகியவை தொடர்பில் பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்துவந்த ஒருவரை, போதைப் பொருளை வாங்கச் செல்பவர்போல் சென்று கையும் களவுமாகப் பொலிஸார் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறுப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகமிடமிருந்து 560 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரைக் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-113)



## போதைப்பொருள்களுடன் யாழில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் 25 கிராம் கேரளக் கஞ்சா மற்றும் 20 போதைமாத்திரைகள் என்பவற்றுடன் மூன்று சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின்கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைத்தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-26.27)

## தீருவில் சதுக்கத்தில் மாவீரர்நாள் ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,நவ.17

மாவீரர் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் வல்வெட்டித்துறை தீருவில் சதுக்கத்தில் துப்புரவுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வல்வெட்டித்துறை தீருவிலில் அமைந்துள்ள குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் நினைவுச் சதுக்கத்தில் வருடா வருடம் மாவீரர் நாள் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முன்னதாக வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளரின் ஏற்பாட்டில் தீருவில் சதுக்கத்தில் சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைக்கப்பட்டிருந்தது. இந்தச் செயற்பாட்டுக்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். அதனையடுத்து நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த சிறுவர் பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த விளையாட்டு உபகரணங்களை அகற்றுவதற்கு வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர் தவமலர் சுரேந்திரநாதன் அறிவுறுத்தலில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தநிலையில் தீருவில் சதுக்க மைதானத்தில் துப்புரவு செய்யப்பட்டு மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-100)




### எல்லாம் 'கொஞ்சக் காலம் தான்'!

**இண்டைக்கு பட்சி கொஞ்சம் தன்ர வாயை அடக்கிக் கொண்டு பேஸ்புக்கில வாசிச்ச ஒரு பதிவை அப்பிடியே இஞ்ச தரப்போகுது. சுரேன் எண்ட மீடியாக் காரர் எழுதின அந்தப் பதிவை வாசிச்சா உங்களுக்கும் ஒரு தெளிவு வரும் கண்டியளோ. இதுதான் அந்தப் பதிவு-**

**ஒரு அக்கா ரிக்ரொக் வந்து தலையை ஆட்டுறா, பிரபல்யம் ஆகுறா. அதன் பின்னர் என்னத் தையோ எல்லாம் போட்டு, களி கிண்டுவது போல கிண்டி, வைற்றிங் கிறீம் செய்யிறா, 'உனைக் கண்டு' எண்டு பாட்டுப் போடுறா. ஓடர் குவியுது. ஓடர் வந்த பிறிண்டைக் காட்டி வெற்றிக் கொடிகட்டு சோங் போடுறா, லவ்வை தெறிக்க விடுறாங்கள்.**

**கிறீம் தயாரிக்கிற அளவுக்கு என்ன பி.எச்.டியோ முடிச்சு இருக்கா என்று தேடிப் பார்த்தா மேக்கப் சேர்டிபிக்கெட். அதை முடிச்சிட்டு வைற்றிங் கிறீம் தயாரிக்கிறாவாம். அதற்கு அனுமதியும் இல்லை. என்.எம்.ஆர்.ஏ. க்கு (ஒப்பனைச் சாதனங்கள் உபாயங்கள் ஔடதங்களின் கட்டுப்பாட்டுச் சபை) இதனைக் கொண்டு போனா செருப்பால அடிப்பாங்கள். ஆனால் ஏமாந்த கூட்டமொன்று வாடிக்கையாளர். இதில ஆச்சரியம் என்னெண்டால் இலங்கையில் வைற்றிங் கிறீமுக்கு இப்பவும் தடை.**

**பைக்குக்கு மேல காலைப் போட்டு நாலைஞ்சு ரிக்ரொக், சடுதியாக பிரபலமாகியாச்சு. ஏமாற்றமடைய கூட்டம் சேர்ந்தவுடன் முயல் எண்ணெய் காய்ச்சுறா. அதை இதுகளை அடிபட்டு வாங்கிறதா அவாவே ஆட்டத்தில பாட்டுப் போட்டு, (எத்தனை பேரை ஏமாற்றினன் பாரன் என்று சொல்லாமல் சொல்லுறா) முயல் எண்ணெய்யால ஒரு மயிரும் வளராது எண்டு அவாக்கும் தெரியும். ஆனால் ஏமாறுறதுக்கெண்டே இஞ்ச அளவெடுத்துச் செய்த கூட்டமிருக்கே.**

**(மிச்சத்தை நாளைக்குப் பாப்பம்)**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச அபிவிருத்தி வங்கி கிளை புதுக்குடியிருப்பில்

நாடு பூராகவும் 272 கிளைகளை கொண்ட அரச வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது முல்லைத்தீவு மாவட்டத்தில் தனது முதலாவது கிளையை புதுக்குடியிருப்பில் இன்று திறக்கவுள்ளது.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சகல குறைந்த வட்டியிலான அபிவிருத்திக் கடன்கள், நிலையான வைப்புகளுக்கு கூடுதலான வட்டிவீதங்கள், நகை அடகு கடன்களுக்கு கூடிய கடன் தொகை போன்ற அனைத்து வங்கிகளையும் விடவும் கூடிய வாடிக்கையாளர் சேவையை முல்லைத்தீவு மக்கள் புதுக்குடியிருப்பு கிளையில் பெற்றுகொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# முதிரைக் குற்றிகளுடன் சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம் நவ,17

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காணி ஒன்றிலிருந்து 25 முதிரை மரக்குற்றிகளை அனுமதிப்பத்திரம் இல்லாமல் எடுத்துச் சென்ற சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்தக் கைது இடம்பெற்றது.

மேலதிக விசாரணைக்குப் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத் தில் முற்படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-27,40)

## திருமலையில்...

சம்பவ இடத்துக்குக் கொண்டுவரப்பட்ட புத்தர்சிலை கடும் எதிர்ப்பையடுத்து நள்ளிரவு மீண்டும் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக அமைக்கப்படும் கட்டுமானத்தைப் பார்வையிடச் சென்ற கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு அந்தப் பகுதியில் புதிதாக பெயர்ப்பலகை ஒன்று நடப்பட்டு கட்டுமானப் பொருள்கள் இறக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக கரையோர பாதுகாப்பு மற்றும்கரையோரவளங்கள்முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகள் திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். அதையடுத்து பொலிஸார் தலையிட்டு அந்தக் கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியுடன், நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆயினும் தொடர்ந்தும் அங்கு கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். திருகோணமலை மாநகரசபைக்குரிய பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையுடனான கட்டுமானத்துக்கு அருகில் இந்தக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே சட்டவிரோதமான முறையில் சிற்றுண்டிச்சாலை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதை அகற்றுவதற்கு கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ அதிகாரிகள் கடந்த 4ஆம் திகதி நடவடிக்கை எடுத்திருந்தனர். ஆயினும் அந்த சட்டவிரோதக் கட்டடம் தொடர்பில் மாநகரசபையால் ஏற்கனவே தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி, ஒருவார கால அவகாசம் அந்தப் பகுதிப் பிக்குவால் கோரப்பட்டிருந்தது. அதனால் அந்த சட்டவிரோதக் கட்டடத்தை அகற்றும் நடவடிக்கைகள் தாமதிக்கப்பட்டிருந்தன. ஒருவாரகால அவகாசம் முடிவுறும் நிலையில், அந்தக் கட்டடத்தை அகற்றும் நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்படும் சாத்தியம் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் மேலும் ஒரு நிரந்தரக் கட்டுமானத்துக்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுமானத்துக்கு கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, நகர சபை உள்ளிட்ட திணைக்களங்களிடம் எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## மணி விழா வாழ்த்தும் பிறந்த தின வாழ்த்தும்

(17.11.2025)

### செல்வி செல்வகுமாரி சுப்பிரமணியம்

(M.Ed, B.A, PGDE, Spl Trd in Primary)

(ஆசிரிய ஆலோசகர் - ஆரம்பக் கல்வி, வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்)



கல்வி உலகின் ஓர் கலங்கரை விளக்காய்
கருமமே கண்ணாய் அரும்பணி ஆற்றி
கண்ணிய சேவையில் களம் பல கண்டு
அகவை அறுபதில் அடியெடுத்து வைத்து
மணிவிழாக் காணும் ஆலோசகரை
பணி ஓய்வில் பயணிக்கத் தொடங்கும்
எங்கள் பண்பான ஆசிரிய ஆலோசகரை
வாழ்த்துகின்றோம்.

வருகின்ற காலங்கள் வசந்தமாய் அமைந்திட
பொருளோடும் புகழோடும் நலமோடு வாழ்வும்
நாளும் சிறந்திட இறையருள் வேண்டி
வாழ்த்துகிறோம் நாளும் ...
வாழ்க! வளமுடன் மகிழ்வுடன்!
இன்று மட்டுமல்ல என்றென்றும்!

**சேவை விபரம்**

- யா/இளவாலை மெய்கண்டான் ம.வி
  21.10.1988 - 04.02.1991
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
  05.02.1991 - 31.12.1992
- யா/இளவாலை மெய்கண்டான் ம.வி
  01.01.1993 - 16.02.1997
- யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை
  17.02.1997 - 31.12.2013
- ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்
  01.01.2014 - 16.11.2025

வாழ்த்துவோர்
ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்
சண்டிலிப்பாய். சங்கானை கல்விக் கோட்டம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 21.02.1952 — மறைவு 27.10.2025

கடந்த 27.10.2025 திங்கட்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்
**சிவலிங்கம் சிவமூர்த்தி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.11.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டு அரங்கு வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 12 . 1948



மறைவு 16 . 11 . 2025

### சின்னத்துரை சிவகுமாரன்

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வேம்பன் வீதி, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவகுமாரன் அவர்கள் நேற்று (16.11.2025) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கதிராசிப்பிள்ளை மற்றும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், சிவானந்தன் (செயலாளர் - வலி - வடக்கு பிரதேச சபை) அவர்களின் அன்புத் தந்தையும், நிறோஜி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - யாழ்/ வலயக் கல்வி அலுவலகம்) அவர்களின் அன்பு மாமனாரும், அக்‌ஷன்யா, ஹரினி (மாணவிகள், யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற விக்னேஸ்வரியின் (ராணி) அன்புச் சகோதரனும், ஜெயக்குமார், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், மகாலிங்கம் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், உடுவில்) மற்றும் உருத்திரலிங்கம் (கனடா), தவமணிதேவி (சுவிஸ்), சிறீஸ்கந்தவேள் (சுவிஸ்), புத்திரசிகாமணி (சுவிஸ்) மற்றும் தேவகியம்மா, காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் தயாநிதி, சிவகாமி, மகாதேவி, ஸ்ரீதரன், நிர்மலாதேவி, சுரேஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேம்பன் வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல் :
குடும்பத்தினர்
076 617 6268

(CS 30731) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



மரநடுகை மாதம் (நவம்பர்)

"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்

- ஆல்பேட் சுவைற்சர்(பிரான்ஸ் தத்துவவியலாளர்)-

# வீண்விரயம் வேண்டாம்..!

இலங்கை நாடாளுமன்றத்தில் தற்போது பட்ஜெட் விவாதங்கள் இடம்பெற்றுவருகின்றன. நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால், கடந்த 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இந்த பட்ஜெட் மீதானநாடாளுமன்ற நடைமுறைகள், டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி மாலை இடம்பெறவுள்ள இறுதி வாக்கெடுப்புடன் நிறைவுக்கு வரவுள்ளன. ஒன்றல்ல இரண்டல்ல ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக ஆறு வாரங்கள் வரையில் பட்ஜெட் விவாதங்களுக்காகச் செலவிடுகின்றது இலங்கை. வருடத்தின் 12 மாதங்களில் அண்ணளவாக 10 வீதத்துக்கும் மேற்பட்ட காலப்பகுதி பட்ஜெட் விவாதத்துக்காகப் பறந்தோடுகின்றது. அத்தனையும் வீண்.

இலங்கை நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர்தான் கனேடிய நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அங்கு, பட்ஜெட் மீதான விவாதங்கள் இடம்பெற்றது வெறும் ஐந்தே நாள்கள்தான். நவம்பர் மாதம் 8ஆம் திகதிமுதல் நேற்றுவரை கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பட்ஜெட் தொடர்பான சிந்தனைக்காலம். இந்தக் காலப்பகுதியில்நாடாளுமன்ற விவாதங்கள் இருக்காது. பட்ஜெட்டின் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆழமாகப் பரிசீலனையில் ஈடுபடுவார்கள். இதைத் தொடர்ந்து இடம்பெறும் நாடாளுமன்ற அமர்வில் பட்ஜெட் தொடர்பான தமது நிலைப்பாட்டை அவர்கள் அறிவிப்பார்கள். ஐந்தல்ல, பத்தல்ல ஐநூறு பில்லியன் டொலர் பெறுமதியான பட்ஜெட்டை கனடா அணுகும் முறை இதுதான். ஆனால், இலங்கையோ ஏழாயிரம் பில்லியன் ரூபா பட்ஜெட்டை வாரக்கணக்கில் இழுத்தடிக்கின்றது.

ஏன் இந்தப் பின்னடைவு? பிரதான காரணம் என்னவெனில், மேற்கு நாடுகளில் பட்ஜெட் தொடர்பான நாடாளுமன்ற விவாதங்களில் 'பட்ஜெட் தொடர்பில் மட்டும்தான்' விவாதிக்கப்படும். தேவையற்ற வாதங்கள், விதண்டாவாதங்கள் அங்கு இருக்காது. ஆனால் இங்கு, பட்ஜெட்டைத் தவிர மிகுதி அனைத்து விடயங்களும் தான் உரையாடப்படுகின்றது. சாதாரண நாள்களில் இடம்பெறும் நாடாளுமன்ற விவாதங்களுக்கும், பட்ஜெட் தொடர்பான விவாதங்களுக்கும் இடையில் எந்தவொரு வேறுபாடும் இல்லை. அதேபல்லவி தான். ஆனால் தலைப்புகள்தான் வெவ்வேறு. ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சியில் உள்ள ஹர்ஷ டி சில்வா நீங்கலாக ஏனையோர்கூட பட்ஜெட் தொடர்பில் காத்தி ரமான உரையை ஆற்றவில்லை. ஏனெனில், பட்ஜெட் தொடர்பான போதிய தெளிதல் - புரிதல் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அரசியல்.

நாட்டில் மறுசீரமைப்பைச் செய்வதற்கு முனையும் அரசாங்கம், முதலில் நாடாளுமன்றத்தில் மறுசீரமைப்பைச் செய்ய வேண்டும். அரசாங்கத்தின் ஆளணிகளைக் குறைப்பதும், ஜனாதிபதியின் ஆலோசகர்களைக் குறைப்பதும் மட்டும் சிக்கனம் என்றாகாது. நாடாளுமன்ற அமர்வின் போது, தொடர்பே இல்லாத தலைப்புகளின் கீழ் முன்வைக்கப்படும் தேவையற்ற விவாதங்களிலும் மில்லியன் ரூபா விரயமாகின்றது. இதுவும் மக்களின் நிதிதான். இதுவும் அவர்களின் வரிதான்...!




# 350 வகை மருந்துகள் விலைக் குறைப்பு



கொழும்பு, நவ.17

**350 வகையான மருந்துகளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக தேசிய ஒளடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதிகாரசபையின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவிக்கையில்

சிறுவர் நோய், புற்றுநோய், நீரிழிவு, உயர் குருதியழுத்தம் உள்ளிட்ட நோய் நிவாரண மருந்துகள் இதில் உள்ளடங்குகின்றன.

குறித்த மருந்துகளின் விலைகள் 60 முதல் 70 வீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரத்தில் மேலும் 200 வகையான மருந்துகளின் விலைகளைக் குறைக்க அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

மருந்தகங்களில் மாத்திரமன்றி தனியார் மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு தேசிய ஒளடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் விலை நிர்ணயத்துக்கமைய மருந்துகளை விற்பனை செய்யவேண்டும். மருந்துகளுக்கு விதிக்கப்பட்டிருந்த உயர்ந்தபட்ச சில்லறை விலையை விடவும் அதிக விலைக்கு அதனை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

## படையெடுக்கும் சுற்றுலாவிகள்!

கொழும்பு, நவ.17

நவம்பர் மாதத்தில் இது வரை மொத்தம் 82,270 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவத்துள்ளது. இதன்படி 2025ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,972,957ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில், 443,622 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ரின் மீன்களுக்கு விலை நிர்ணயம்

கொழும்பு, நவ.17

ரின் மீன் வகைகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 425 கிராம் நிறையுடைய டுனா ரின் மீனின் அதிகபட்ச விலை 380 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 425 கிராம் நிறையுடைய மெக்கரல் 480 ரூபாவாகவும், 425 கிராம் நிறையுடைய ஜெக் மெக்கரல் 560 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, நவ.17

நாட்டில் பல மாவட்டங்களுக்கு பலத்த மின்னல் தாக்கங்கள் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)



# கெஹெல்பத்தர பத்மேவின் வங்கிக் கணக்குகள் ஆராய்வு

கொழும்பு, நவ.17

தற்போது பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச்சேர்ந்த 'கெஹெல் பத்தர பத்மே' என்பவருக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகள் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்குகள் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு கொழும்பு மேலதிக நீதிவான் லஹிரு டி சில்வா உத்தரவிட்டுள்ளார். இவர் கடந்த ஓகஸ்ட் மாதம் இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் வைத்து, மேலும் பல பாதாள உலகக்குழு உறுப்பினர்களுடன் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை – கார்த்திகை 2
18.11.2025
சுபநேரம் : 10.38 - 12.08
ராகுகாலம் : 03.08 - 04.38

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வகையில் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** தந்தைவழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மிதுனம்:** நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற் படக்கூடும். மூன்றாவது நபரின் தலையீடு காரணமாக கணவன் – மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். வாழ்க்கைத் துணைவழியில் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்று எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் –மனைவிக்கிடையே சிறுசிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். வாழ்க்கைத் துணை உங்கள் பணிகளில் பங்கெடுத்துக் கொள்வது ஆறுதலாக இருக்கும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. இளைய சகோதரர்கள் பண உதவி கேட்டு வருவார்கள்.

**தனுசு:** கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகள்வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள்.

**மகரம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு சற்றுக் கவலை தரும். நண்பர்களுடன் சிறு சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** இன்று நினைத்த காரியத்தை முடிப்பதில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வது ஆறுதல் தரும்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

# கண்டாவளையில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

## அதிகாரிகள் குழு ஆராய்வு

கிளிநொச்சி,நவ.17

கண்டாவளை வெளிக்கண்டல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி இரவு வேளைகளில் தொடரும் மணல் அகழ்வு தொடர்பில் துறைசார் அதிகாரிகள் குழுவினர் நேரில் ஆராய்ந்தனர்.



அந்தப்பகுதி வயல் நிலங்கள் மற்றும் ஆற்றுப்பகுதியிலுள்ள மணல், பல அடி ஆழத்துக்குத் தோண்டப்பட்டு அகழப்படுகின்றது. அவ்வாறு அகழப்படும் மணல் அங்கிருந்து வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இந்த நிலையில் இதனைத் தடுக்கும் நோக்குடன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், கண்டாவளைப் பிரதேச செயலர் பிருந்தாகரன் மற்றும் கடற்றொழில் அமைச்சரின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் கடந்த வியாழக்கிழமை அந்தப் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டனர். இதுதொடர்பில் சிறப்பு அதிரடிப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அண்மையில் டிப்பர் வாகனம் ஒன்றும் உழவு இயந்திரமும் சிறப்பு அதிரடிப்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இரு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (க-113)

## சைவப்புலவர் சங்கத்தின் பட்டமளிப்பும், மாநாடும்

யாழ்ப்பாணம்,நவ.17

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் 62ஆவது பட்டமளிப்பு விழாவும், சைவ மாநாடும் மூன்று அமர்வுகளாக எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கோப்பாய் ஆசிரிய கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் கா.கமலநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை இந்துக் கற்கைகள் பீடத் தலைவர் சிவஸ்ரீ. ம.பாலகைலாசநாதக் குருக்கள் கலந்துகொள்வார். முதலாவது அமர்வில் யாழ். பல்கலைக் கழகத்தின் முதுதத்துவமாணி பட்டம் 2024 இல் பெற்றமைக்கான கௌரவிப்பு இடம்பெறும். 2024ஆம் ஆண்டுத் தேர்வில் சித்தி பெற்று சைவப்புலவர் பட்டம் பெற்றவர்கள் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படும்.

இரண்டாவது அமர்வில் சைவநாதம்12 நூல் வெளியீடு இடம்பெறும். மூன்றாவது அமர்வில் 62ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதலிடம் பெற்ற நிகழ்வுகளின் முன்வைப்பு இடம்பெறும். தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனின் சைவ மாநாட்டுச் சிறப்புரை இடம்பெறும். (க-159)




## மத நல்லிணக்கம் விசேட கருத்தமர்வு

மன்னார்,நவ.17

நாடளாவிய ரீதியில் மத நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளை அடையாளம் கண்டு, அவற்றின் ஊடாக நிலையான மத நல்லிணக்கம் மற்றும் மதச்சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான வாய்பை இளைஞர்களுக்கு ஏற்படுத்தும் நோக்குடனான, விசேட கருத்தமர்வு மன்னார் கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.


இதில் ஒவ்வொரு மத அடையாளங்களையும், நம்பிக்கைகளையும், உரிமைகளையும் எவ்வாறு மதித்தல், அவற்றை அவமதிப்பதால் ஏற்படும் பாதிப்புகள், இலங்கையிலுள்ள மதச்சுதந்திரம் மற்றும் மத நம்பிக்கை தொடர்பான உரிமைகள், இலங்கையின் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இளைஞர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில், மன்னார்க் கிளைக் காரியாலய கிராம அபிவிருத்தி நிறுவன உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்புடன், மன்னார் மாவட்டத்தில் கருத்தமர்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-56)



பலாலி சமூக அமைப்பின் நிதி அனுசரணையில் அமைக்கப்பட்ட பலாலி கிழக்கு டச்சு வீதிக்கான பெயர்ப்பலகை வலி. வடக்குத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனால் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதரப்பு உறவை வலுவாக்க இலங்கை - அமெரிக்கா பேச்சு



கொழும்பு, நவ.17

இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கிடையிலான வர்த்தகம் உட்பட இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவரான முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் கலாநிதி போல் கபூரை சந்தித்துப் பேச்சு நடத்தியபோது இது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலர் பெதானி போலஸ் மொறிசனும் கலந்துகொண்டிருந்தார். இலங்கைத் தூதரகத்தின் பிரதி தலைவர் மதுகா விக்ரமாரச்சி, தூதரக அதிகாரி சதுரி பெரேரா, பாதுகாப்பு ஆலோசகர் கொமடோர் துமிந்து அபேவிக்ரம ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர் என தனது முகநூல் பக்கத்தில் மஹிந்த சமரசிங்க பதிவிட்டுள்ளார். ட்ரம்பின் வர்த்தகப் போரில் இலங்கையும் சிக்கியது.

எனினும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்த இராஜதந்திர நடவடிக்கைகளால் வரிக் குறைப்புச் செய்யப்பட்டது. இதில் தூதுவர் மஹிந்த சமரசிங்க முக்கிய பாத்திரத்தை வகித்தார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், இராஜதந்திரத் துறையில் மறுசீரமைப்பு இடம்பெற்றது. எனினும், மஹிந்த சமரசிங்கவின் சிறப்பான சேவை கருதி, அவரது பதவியில் மாற்றம் மேற்கொள்ளவில்லை. (எ-44)

# மதரீதியான பாரபட்சம் தே.ம.ச. அரசில் இல்லை

அமைச்சர் சுனில் செனவி தெரிவிப்பு

கொழும்பு, நவ.17

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு மேற்கொள்ளும் யாத்திரை புனித யாத்திரையாக அறிவிக்கப்பட்டுள்ளது. மத விவகாரங்களில் பாரபட்சம் காட்டப்படுகின்றது என்று கூறப்படுவது முற்றிலும் தவறு. தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என்று புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உரிமைகளை வென்றெடுக்க போராட்டம் செய்ய வேண்டிய அவசியமில்லை. மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சகல பிரச்சினைகளுக்கும் நாங்கள் தீர்வளித்துள்ளோம் என்று குறிப்பிடவில்லை. கட்டம் கட்டமாகவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வளிப்போம்.

அனைத்தையும் எதிர்க்கும் மனநிலையில் உள்ள எதிர்க்கட்சியினர் வரவு-செலவுத் திட்டத்தையும் எதிர்ப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. இந்து மத விவகாரத்துக்கு நிதி ஒதுக்கீயுள்ளமை குறைவாக உள்ளது என்று எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். இது முற்றிலும் தவறானது. கோயில் உட்பட மதத் தலங்கள் புனரமைப்புக்கு பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையர் தினத்துக்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மதங்களுக்கு வேறுபடுத்தப்பட்ட வகையில் சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது-என்றார். (எ-இ)

# கவிழ்ப்பதற்கு 5,000 பேரெனில் காப்பாற்றுவதற்கு 50,000 பேர்!

சவால் விடுகின்றார் ரில்வின் சில்வா

கொழும்பு, நவ.17

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக எதிரணிகளால் 5 ஆயிரம் பேரைத் திரட்ட முடியுமெனில், அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக 50 ஆயிரம் பேருடன் களமிறங்கக்கூடிய வலுவான அரசியல் கட்டமைப்பு எம்வசம் உள்ளது என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். 36 ஆவது கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் விஹாரமஹா தேவி திறந்த வெளியரங்கில் அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆட்சியைக் கவிழ்ப்பது தொடர்பாகவும், கொழும்பைச் சுற்றி வளைப்பது தொடர்பாகவும் தற்போது கதைக் கின்றனர். அவர்களின் நகர்வுகள் எமக்கு சவால் அல்ல. எப்படிப் போராட்டம் நடத்தவேண்டும், எப்படிப் பேரணி நடத்த வேண்டும் எனச் செய்து காட்டியவர்கள் நாம். 3000 ,4000 பேரைத் திரட்டி எம்மை மிரட்டமுடியாது. பேரணி பார்க்கவேண்டுமானால் நாமும் நடத்திக் காட்டுகின்றோம். அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக 5 ஆயிரம் பேரைத் திரட்டமுடியுமென்றால் பாதுகாப்பதற்காக 50 ஆயிரம் பேருடன் களமிறங்கும் வல்லமை எமது அரசியல் அணிக்கு உள்ளது. அதனால் எம்முடன் விளையாட வர வேண்டாம்-என்றார். (எ-44)

# ஐ.ம.ச. ஆதரவாளர்கள் நுகேகொட வருவார்கள்

பொதுஜன பெரமுன நம்பிக்கை

கொழும்பு, நவ.17

நுகேகொட கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காவிட்டாலும்கூட கிராமிய மட்டத்திலுள்ள அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்பார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, எதிர்வரும் 21ஆம் திகதி நடத்தப்படவுள்ள கூட்டம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அந்தக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நுகேகொட கூட்டத்தில் எமது கட்சி ஆதரவாளர்கள் பங்கேற்பார்கள். அவர்கள் வரும் பேருந்துகளில் ஐக்கிய மக்கள் சக்தியின் கிராமிய மட்ட ஆதரவாளர்களும் நிச்சயம் வருவார்கள். ஏனெனில் கடந்த தேர்தலின்போது தாம் விட்ட தவறைச் சரிசெய்வதற்கு மக்கள் ஆர்வமாக உள்ளனர். கட்சி பேதமின்றி இப்பேரணியில் அனைவரும் பங்கேற்கவேண்டும்-என்றார். (எ-44)

# சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக் கலந்துரையாடல்

கிளிநொச்சி,நவ.17

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் சிவில் குழுக்களை வலுப்படுத்தி, சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. சிரேஸ்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சமன் அங்கம்மன தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், கிராமத்தில் நடைபெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளை எவ்வாறு கட்டுப்படுத்துதல், அதற்காக ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (க-113)



# ஊழல் வலையமைப்பு வேட்டையாடல் சிறப்பு

பொன்சேகா பாராட்டு

ஊழல் வலையமைப்புக்கு முழுமையாக முடிவு கட்டுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சி பாராட்டத்தக்கது என்று முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் வலையமைப்பை முற்றாக இல்லாதொழிப்பதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும். ஆனால் அதற்குரிய முயற்சி எடுக்கப்படுவதை மதிக்கின்றோம், வரவேற்கின்றோம். ரணில் விக்கிரமசிங்கதான் என்னை அரசியலுக்குக் கொண்டுவந்தார். அவரைச் சிறையில் அடைத்தபோது கவலை அடைந்தேன். எனினும், இதன்மூலம் அரசாங்கம் சிறந்த முன்னுதாரணத்தை வழங்கியது- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவாக போட்டிகளும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை தனது அங்கத்துவ சங்கங் களுடன் இணைந்து கூட்டுறவுப்பெரியார் அமரர் வீ.வீரசிங்கத்தின் 61 ஆவது நினைவு தினத்தை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி கொண்டாடவுள்ளது.

அதனை முன்னிட்டு கூட்டுறவுப்பணி யாளர்கள் மற்றும் அங்கத்தவர்களுக் கான பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் யாழ்.மாவட்டத்தில் தன்னலம் கருதாது சேவையாற்றிவரும் கூட்டுற வாளர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

ஒவ்வொரு சங்கத்தினரும் தங்கள் சங் கம் சார்ந்த கௌரவம் பெறும் தகை மையுடைய கூட்டுறவாளர் ஒருவரின் பெயரைப் பணிப்பாளர் சபையில் ஆராய்ந்து சிபாரிசு செய்து எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவாளர் கௌரவிப்பிற்கு இருக் கவேண்டிய தகைமைகளாக, 15 வரு டங்களுக்கு மேல் கூட்டுறவில் அங்கத் தவராக இணைந்து சேவை செய்தவ ராக இருக்கவேண்டும். கிளைக்குழு பொதுச்சபை நெறியாளர் சபை போன்ற ஏதாவது பதவிகளிலிருந்து கூட்டுறவுத்துறைக்கு ஆற்றிய பணி கள் கவனத்திற்கொள்ளப்படவேண் டும், சங்கத் தொழிற்பரப்பிலுள்ள அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்க ளின் நல்ல அபிப்பிராயம் பெற்றவராக இருக்கவேண்டும்,

ஒரு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஆகக்கூடியது மூன்று பணியாளர்கள் அல்லது மூன்று அங்கத்தவர்கள் மட் டுமே பங்குபற்றமுடியும். பணியா ளர்கள் "கூட்டுறவு அமைப்புகளின் வளர்ச்சிக்கு நவீன தொழில்நுட்பத் தின் பங்கு" எனும் தலைப்பில் 5-7 நிமிடங்கள் பேசவேண்டும்.

கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் "பெரியார் வீரசிங்கத்தின் வழித்தடத் தில் இன்றைய கூட்டுறவைக் கட்டியெ முப்புவோம்" எனும் தலைப்பில் 5-7 நிமிடங்கள் பேசவேண்டும்.

பணியாளர்கள் "இன்றைய பொருளா தாரச் சூழலில் கூட்டுறவு அமைப்பு களை இணைத்து பயணிக்கவேண்டி யதன் அவசியம்" என்னும் தலைப்பில் 250-300 வரையான சொற்களில் ஒரு மணித்தியாலத்தில் கட்டுரைகளை எழுத வேண்டும்.

கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் "கூட் டுறவு அமைப்புகளில் இளம் சமுதா யத்தின் பங்களிப்பு" என்னும் தலைப்பில் 250-300 வரையான சொற்களில் ஒரு மணித்தியாலத்தில் கட்டுரைகளை எழுத வேண்டும்.

விண்ணப்பங்களை சங்கத்தலைவர், பொது முகாமையாளர், செயலாளர் ஆகியோரின் சிபார்சுடன் விண்ணப் பங்களை செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை வீரசிங்கம் கட்டடத்தொகுதி, 2ஆம் மாடி இல.12 கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 24ஆம் திக திக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும். (ச-41-159)



# 275 மாவீரர்களின் பெற்றோர் வள்ளிபுனத்தில் கௌரவிப்பு

முல்லைத்தீவு.நவ.17

மாவீரர் தினத்தை முன்னிட்டு, புதுக்குடியிருப்புப் பிர தேசத்தைச் சேர்ந்த 275 மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கௌரவிக்கப்பட்டனர். மங் கள வாத்திய இசையுடன் மாவீரர்களின் பெற்றோர் மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலைஅணிவிக்கப்பட்டது. நினைவுரைகளைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோருக்கு உலர் உணவுப்பொதிகள் மற்றும் பழமரக்கன்றுகள் வழங் கப்பட்டன. அன்னை அறக்கட்டளையின் ஏற்பாட் டில், மண்ணையும், மக்களையும் நேசிப்போம் என்ற நோக்கில் புலம்பெயர் தேசத்தில் உள்ள இரண்டுநண்பர்களின்முழுமையானநிதிப்பங்களில் 275 மாவீரர்களின்பெற்றோர் மற்றும் உறவினர்கள் கௌரவிக்கப்பட்டனர். (க-19)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.17

குரும்பசிட்டி கிராம அபிவி ருத்திச்சங்கம் அமரர் ஆ.சி. நடராசாவின் 14ஆவது சிரார்த்த தினத்தை முன் னிட்டு நடத்தும் மாணவர்க ளின் கல்வியை ஊக்குவிப் பதற்கான கௌரவிப்பு நிகழ்வு குரும்பசிட்டி கலை ஞானி கலாசார மண்டபத் தில் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்குள் வசிக் கும் குரும்பசிட்டியைப் பிறப் பிடமாகக் கொண்ட குடும் பங்களிலுள்ள மாணவர் கள்விண்ணப்பிக்கமுடியும்.

மேலதிகத் தகவல்களை தெல்லிப்பழை கிராம அபி விருத்திச்சங்கத் தலைவ ரின் 0773719463 எனும் தொலைபேசி இலக்கத் துக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். எதி ர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய தாக விண்ணப்பிக்க வேண் டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (ச-41)

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி சிப்ரியன் வரப்பிரகாசம்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி சிப்ரியன் வரப்பிரகாசம் தி.கு கடந்த 12.11.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (17.11.2025) திங்கட்கிழமை மு.ப 08.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர். இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி ஜொய்லின்றாஜி ஸ்ரான்லி
மாகாணத் தலைவி.
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(C5 46511) E

## கண்ணீர் அஞ்சலி




வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் செயலாளர்
திரு.சிவகுமாரன் சிவானந்தன்
அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்துரை சிவகுமாரன்**


2025.11.16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை,

# இருபத்தாறாம், இருபத்தோராம் ஆண்டு நினைவலைகள்



செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981




செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981



செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.03.1981



செல்வன்
பூரணமூர்த்தி கந்தர்வன்
தோற்றம் : 11.05.1981



செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

17.11.1999 : மறைவு

17.05.2004

**இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்.**

17.11.2025 திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில்
சுகாதார விதிமுறைகளை பின்பற்றி நினைவு கூரல் இடம்பெறும்

**ஆர்வமுள்ளவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்" ஏற்பாட்டாளர்கள்.
தொடர்பு :இரா. மயூதரன் +94760700254 / [illegible] 0773 122 198 E-mail : hartleyboys@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுவேலியில் அதிக மழை வீழ்ச்சி

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் இலங்கையிலேயே அச்சுவேலியில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அச்சுவேலியில் 61.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்தனர். சாவகச்சேரியில் 40.4 மில்லிமீற்றரும், யாழ்ப்பாணம் பண்ணை மற்றும் கோட்டைப் பகுதிகளில் 36.5 மில்லிமீற்றரும், திருநெல்வேலியில் 32.5 மில்லிமீற்றரும், தெல்லிப்பழையில் 25.1 மில்லிமீற்றரும், மீசாலையில் 23.5 மில்லிமீற்றரும், பருத்தித்துறையில் 11.4 மில்லிமீற்றரும் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (எ-66)


## அன்னையின் நினைவில் 9 ஆண்டுகள்



மலர்வு 13.09.1935 உதிர்வு 17.11.2016

### அமரர் திருமதி செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை

பாலூட்டி தாலாட்டி சீராட்டி வளர்த்த தாயே
நெஞ்சினிலே என்றும் நீங்காமல் நீ இருந்து
எம் நினைவிலே கலந்திருக்கும் நினைவுகள்
என்றென்றும் பசுமையாய் பதிந்திருக்க
மறைந்து ஆண்டுகள் ஒன்பது கழிந்தாலும்
நெஞ்சிலே நீ இருப்பாய்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்

## மரண அறிவித்தல்

பிறப்பு 04.05.1935



இறப்பு 14.11.2025

### இளையதம்பி பரமேஸ்வரி

உரும்பிராயை பிறப்பிடமாகவும் தன் வாழ்வின் முற்பகுதியை தின்பனை கோப்பாய் வடக்கையையும் பிற்பாதியை கனடா Ontairoவையும் தனது வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி பரமேஸ்வரி அவர்கள் (14.11.2025) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அழகமுத்து தம்பதிகளின் அன்புப் புத்திரியும், காலஞ்சென்ற இளையதம்பி அவர்களின் அன்பு மனைவியும், பரமானந்தராசா, ஆனந்தராசா (கனடா), செல்வராசா, ஜெயந்தினி (கனடா), தவராசா (கனடா), தேவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, சந்திரா (கனடா), கேதாம்பாள், உதயகுமார் (கனடா), ஜயந்தி (பட்டு) (கனடா), ஸ்ரீரஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்ஷிகா, வற்சலா, விஷ்ணுகாந், சுரேஸ்காந், சதீஸ்குமார், நிவேதா (கனடா), திலானி (கனடா), பிரியங்கா, சஜீபன் (கனடா), முகுந்தன் (கனடா), சாருஜன் (கனடா), பிறைஜன் (கனடா), மதுரா (பிரான்ஸ்), மதுஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாட்டியும், லதுஷன், ஹர்ஷாஜெனி, வேணுஜா, தருண், அபினாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், மகேஸ்வரி, பூபாலசிங்கம், ஈஸ்வரி, சரஸ்வதி, கணேஸ்வரி, தங்கரத்தினம், நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2025) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று மதியம் 11.00 மணியளவில் Highland Hills Crematorium (Ontario, Canada) இல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(CS 59830) E

தின்பனை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
பரமானந்தராசா : 0713796155 (கந்தர்மடம்)
செல்வராசா : 0775034743 (கோப்பாய்)

## 20 வது நினைவுக் காணிக்கை



### அமரர் வினாசித்தம்பி உதயசந்திரன்

திதி: திரயோதசி

உதயம் 02.04.1940 அஸ்தமனம் 29.11.2005

நாட்களோ வாரங்களாகினது
வாரங்கள் மாதங்களாகின
மாதங்கள் வருடங்களாகியது
வருடமோ இருபதாகிப் போயிற்று அப்பா

பாசமுள்ள சாமி எம் அப்பா
பகலில் உதயமாகிய சூரியனாய்
இருளில் ஒளியைத் தரும் சந்திரனாய்
எம் வீட்டின் உதயதீபம் நீங்கள் - அப்பா

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா எனும் ஆலமர விருட்சம்
நிழல் தரும் மரமல்ல நிழல்களைத்தரும்
பூரண விழுதுகளின் சகாப்தம் - அப்பா

எங்களுக்காய் அக்கணம் அயராது உழைத்து
அகம் மகிழவைத்தீர்கள்
ஆசைப்பட்டுக் கேட்கு முன்பே
இஷ்டப்பட்டு வாங்கித் தருவீர்களே அப்பா

சிரித்த முகத்துடனே இன்புறக்கதை கூறி
பொறுமைதனைக் காத்து நின்று எங்களுக்கெல்லாம்
அன்புதனை பொக்கிசமாய்தனை நிறுத்து
அகழ்விளக்காய் திகழ்ந்தீர்களே - அப்பா

கதிகலங்கி நிற்கிறோம் காலவனின் சூட்சுமத்தால்
இழப்புகளை எண்ணி தினமும்
மூச்சடக்கிய முனகலுடன் பெரும்
மூச்சை மட்டும் விடுகின்றோம் - அப்பா

பசுமை நிறைந்த நிலமாய் இருந்த - நம்
இல்லம் இன்று வெறுமனையாய் வற்றிக்கிடக்கிறதே
எத்தனை சாமியை வணங்கினாலும்
எம்மவது நெஞ்சகத்து சாமியே நீங்களே - அப்பா

அண்ணார்ந்துதான் பார்க்கின்றோம் - எமை
அணைத்துவிட ஒருமுறை வருவீர்கள் என
ஆனாலும் அணைத்துவிட்டுச் சென்றீர்களே
அம்மாவையும் உங்களுடன் கூடவே - அப்பா

துடிக்கின்றோம் துவழ்கின்றோம்
உங்கள் இழப்பை தினம் எண்ணி
எங்களை தனியாக தவிக்கவிட்டு
விண்ணுலகம் சென்றதேனோ - அப்பா

நாட்களோ நகர்கின்றன நரகமாய்
நம் காலங்கள் கழிகின்றது கண்ணீரோடு
உதயனே உத்தமரே - எங்கள் குலசாமி
என்றும் எங்களின் உதயதீபமாய்
ஒளிதந்து நீங்கா நினைவுகளோடு - எம் உள்ளங்களில்
எப்பொழுதும் நிறைந்திருப்பீர்கள் - அப்பா.
அப்பா! அப்பா! அப்பா!

74, பத்திரகாளி கோவிலடி
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

என்றும் நினைவில்
குடும்பத்தினர்
077 577 7717


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.11.2025 திங்கட்கிழமை

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் விளையாட்டு விழா கிளிநொச்சியில்




கிளிநொச்சி, நவ.17

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 35ஆவது இளைஞர் விளையாட்டு விழாவின் கிளிநொச்சி மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதிப்போட்டி கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதியின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

தடகளப்போட்டியில் மாவட்ட ரீதியில் வெற்றியீட்டியோருக்கு சான்றிதழ்களும் வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன. காட்சிப்போட்டியாக யாழ். மாவட்ட அணிக்கும் கிளிநொச்சி மாவட்ட அணிக்குமிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டம் நடைபெற்றது. அதில் யாழ்ப்பாண அணி 2:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இளைஞர் கழகங்களின் கிளிநொச்சி மாவட்ட சம்மேளனத் தலைவர் ப.நிலவரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் தினிந்து சமன் ஹென்னாயக்கவும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனும், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் சட்டத்தரணி சுபுன் விஜேரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-25.113)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவு மாணவர்களுக்கு பெயார் மெட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு, அபாயகர ஒடதங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவு பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (ச-41-9)



சாவகச்சேரி நகரசபையின் கல்வயல் வட்டாரத்தில் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் காணப்பட்ட வீதியோர மரக்கிளைகள் மற்றும் பற்றைகள் வட்டார உறுப்பினர் இ.யோகநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை துப்புரவு செய்யப்பட்டன. (ச-41)

# ரயில் இயந்திரம் பழுதடைந்ததால் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று இரவு பயணித்த ரயில் மறவன்புலவுப் பகுதியில் பயணித்தபோது இயந்திரம் செயலிழந்தால் பயணம் தடைப்பட்டது.

வயல்களுக்கு நடுவே ரயில் பழுதடைந்து நீண்டநேரம் நின்றதால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நள்ளிரவு தாண்டியும் ரயில் பயணத்தை ஆரம் பிக்காததால் பயணிகள் மழைக்கு மத்தியில் அந்தரிக்கநேரிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-131)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட பிரதேசமட்ட கலை இலக்கியப் பரிசளிப்பு விழா உதவிப் பிரதேச செயலாளர் க.பார்த்தீபன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வேலணைப் பிரதேச செயலாளர் த.அகிலன் கலந்துகொண்டார். (எ-25.9)



## சோமவாரம் ஆரம்பம்

யாழ்., நவ.17

கார்த்திகைத் திங்கள் முதலாவது சோமவாரம் இன்று ஆரம்பமாகின்றது.

இதனை முன்னிட்டு முன்னிட்டு சிவாலயங்கள் மற்றும் முருகன் ஆலயங்களில் விசேட அபிஷேகம், சிறப்புப் பூஜைகள் என்பன இடம்பெறவுள்ளன. (ச-41-17)

கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை அதிபர் ஆனந்தராசா தலைமையில் பாடசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். நிகழ்வில் பரிசில் வழங்கல், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (எ-41-17)





## பரிசளிப்பு விழா

தென்மராட்சி வரணி பொதுநூலக தேசிய வாசிப்புமாதப் பரிசளிப்பு விழா சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள், விருந்தினர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கல், மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி லாகினி நிருபராஜ், சிறப்பு விருந்தினராக வரணி மத்திய கல்லூரி அதிபர் இ.கோகுலராகவன், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், வரணி பொதுநூலகத்தினர், கிராம அலுவலர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-41-159)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர -...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.
இலங்கை தமிழரசுக் கட்சிக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் விரைவில் சந்திப்பு நடக்கும். நல்லிணக்க சமிக்ஞையாக வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் விலகி இருப்பதற்கு தமிழரசுக் கட்சி முடிவு செய்துள்ளது எனவும் சாணக்கியன் முன்னர் குறிப்பிட்டிருந்தார். அந்தச் சந்திப்புத் தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-எ-44)

## நெடுந்தீவில்...

கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தத் துப்பாக்கி துருப்பிடித்து, பாவிக்கமுடியாத நிலைமையில் காணப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.
9ஆம் வட்டாரத்தில் பாவனையற்ற காணி ஒன்றில் இருந்தே துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஊர்காவற்றுறைப் பொலிஸார், கடந்த வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கியை மீட்டுள்ளனர். (அ-எ-66)

## இந்தியாவுக்குச்...

பூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.
இந்தியா செல்லும் ரில்வின் சில்வா தலைமையிலான ஜே.வி.பி. உயர்மட்டத் தலைவர்கள், புதுடில்லியின் உயர்மட்ட அரசியல் சந்திப்புகளில் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ரில்வின் சில்வா இந்தியா பறக்கக்கூடும் எனவும் தெரியவருகின்றது.
மக்கள் விடுதலை முன்னணியின் ஆரம்பக் கொள்கைகளில் இந்திய எதிர்ப்பு முதன்மையாக இருந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து மக்கள் விடுதலை முன்னணி மேற்கொண்ட போராட்டங்களில் ரில்வின் சில்வாவும் முக்கியமான பங்காற்றியிருந்தார். தற்போது ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளமை மக்கள் விடுதலை முன்னணியின் நீண்டகால வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு பெரிய இராஜதந்திர மாற்றம் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.
ரில்வின் சில்வாவின் இந்தப் பயணம் இந்தியாவின் ஆளும்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் அழைப்பின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவரது இந்தப் பயணம் மக்கள் விடுதலை முன்னணி பிராந்திய சக்தியான இந்தியாவுடன் நேரடி உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தயாராகியுள்ளதைக் காட்டுகின்றது என்றும் அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்குப் பயணம் செய்து பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருந்தார். அவரது பயணத்துக்குப் பின்னர் ரில்வின் சில்வாவும் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். தற்போது அவரது இந்தியப் பயணம் ஜே.வி.பி. இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர சமநிலையை நிலைநாட்ட முற்படுவதைக் காட்டுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.
அதேவேளை, இந்தியாவுடனான கடந்த கால முரண்பாடுகள் மற்றும் கடுமையான விமர்சனங்கள் தொடர்பில், இந்தியத் தலைமைக்கு நேரடியாக இராஜதந்திர விளக்கமளித்து, புதிய உறவுப் பாதையைத் தொடங்குவதற்கு இந்தப் பயணம் வாய்ப்பாக அமையலாம் என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-44)

## மைத்ரி...

குற்றப்புலனாய்வுப் பிரிவின் குழுவொன்று பிரிட்டன் சென்றுள்ளது எனவும், ஐந்து நாள் பயணமாக இந்தக் குழு இவ்வாரத் தொடக்கத்தில் பிரிட்டன் சென்றுள்ளது எனவும் சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் பெறப்படாமல் அல்லது சட்டமா அதிபருக்கு தெரியப்படுத்தாமலேயே குற்றப் புலனாய்வு அதிகாரிகள் அதிகாரிகளின் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவர் தலைமையிலான அந்தக் குழுவில், உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் ஒருவரும், தலைமை ஆய்வாளர் ஒருவரும், இரண்டு இளநிலை அதிகாரிகளும், இடம்பெற்றுள்ளனர்.
இந்தப் பயணம் தொடர்பாக சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த பெரேரா உள்ளிட்ட சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உயர் மட்டங்களில் உள்ளவர்களுக்குத் தெரியாது என்று சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
சட்டமா அதிபர் திணைக்களத்துக்குத் தெரியாமல், இந்தக் குழுவை சுயாதீனமாக அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்தக் குழுவினர், பிரிட்டனுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர், சரோஜா சிறிசேனவிடம் இன்று வாக்குமூலம் பதிவு செய்யவுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. இவர் 2023 செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவராக பதவி வகித்திருந்தார்.
ரணில் விக்கிரமசிங்கவின் பாரியாரான மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவுக்காக ரணில் விக்கிரமசிங்க 2023ஆம் ஆண்டு பிரிட்டனுக்கு மேற்கொண்ட இரண்டு நாள் பயணத்தின் போது, 16.6 மில்லியன் ரூபா பொது நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட பின்னர், அவர் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் பிணை கிடைத்த பின்னர் அவர் வீடு திரும்பினார்.
அதேவேளை, ரணிலின் லண்டன் பயணம் அதிகாரபூர்வ அழைப்பின் பேரில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ பயணம் என, ரணில் விக்கிரமசிங்க தரப்பில் கூறப்பட்டு வருகிறது. இந்த நிலையிலேயே அந்த அழைப்பு கடிதத்தின் நம்பகத்தன்மை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-எ-44)

## வடக்கு,...

அதேவேளை, நேற்று நிலவியமழை மற்றும் காற்றுடனான காலநிலை காரணமாக வேலணை பிரதேச செயலர் பிரிவில், 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் இடர் முகாமைத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.
எதிர்வரும் 19ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி கிடைக்கும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா.பிரதீபராஜா எதிர்வுகூறியுள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணி வரையான காலப்பகுதியில் பல பகுதிகளிலும் சராசரியாக கடந்த 36 மணித்தியாலங்களில் 125 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
எதிர்வரும் 23ஆம் திகதியிலிருந்து 28ஆம் திகதிவரை வங்காள விரிகுடாவில் புயல் ஒன்று உருவாவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதால் அந்தக் காலப் பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிகக் கன மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-26)

## அரசின்...

மேலும் தெரிவித்துள்ளதாவது:-
அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு புதிய ஆயுதங்களை எதிரணிகள் உருவாக்கிக்கொள்ளவேண்டும். நாங்கள் உங்கள் மீது முன்வைத்த விமர்சனக் கணைகளையே எம்மை நோக்கி மீள செலுத்த வேண்டாம். புதிய ஆயுதம் என்பது, எம்மைவிட சிறந்த திட்டங்கள் அவசியம் என்பதாகும்.
தேசிய சமத்துவத்துக்காக நாம் முழு அர்ப்பணிப்புடன்செயற்படுவோம். நினைவேந்தல் நடத்துவதற்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இடமளிக்கப்பட்டது. 2025 நவம்பர் மாதமும் அவ்வாறே தான். உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்குரிய உரிமை மக்களுக்கு உள்ளது. அந்த உரிமையென்பது புலிகளை நினைவு கூருவதற்கானது அல்ல. எமது அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் பொது இடங்களில் (ஜே.வி.பி. மாவீரர்களுக்கு) நினைவிடம் அமைக்க வில்லை. அவர்களுக்கான நினைவுத் தூபி எம் மனங்களில் இருந்தால் போதும்.
எமது அரசியல் கொள்கை எந்தளவு வலுவானது என்றால், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு தலைவர்கள் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். கடந்த காலங்களில் பதவி, சலுகைகள் வழங்கப்பட்டே ஆதரவாக வாக்கு பெறப்பட்டது. ஆனால் நாம் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்கி மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்றோம் - என்றார். (அ-எ-44)

## தொழிற்சங்க...

நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவர்களால் வழங்கப்படும் பிரதானமான சேவைகள் இன்று காலை 8 மணிமுதல் வரையறுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
2026 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதார சேவைகள் மற்றும் மருத்துவர்களின் பிரச்சினைகளை முறையாகத் தீர்க்கத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கப்பட்டவுள்ளது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக அரசாங்கத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், இதற்குச் சாதகமான பதில் கிடைக்காததால் தொழிற்சங்க நடவடிக்கையை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

## போதைப்...

பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 30 கிராம் ஹேஷிஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-26)

## பாடசாலை,...

ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.
நேற்று களுத்துறை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். இந்தச் சுற்றறிக்கை இன்று கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களிலும் போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை அமைப்பதற்கான சுற்றறிக்கைகள் அரச நிர்வாகச் செயலாளர் ஊடாக வெளியிடப்படவுள்ளன. அரசு சாரா நிறுவனங்களிலும் போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை நிறுவுவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
போதைப்பொருள் ஒழிப்புக்கான தேசிய நடவடிக்கைக்கு இணங்க, அரச நிறுவனங்களில் தேசிய நடவடிக்கைக் குழுக்களை அமைக்கும் வேலைத்திட்டத்துக்கு இணையாக இது மேற்கொள்ளப்படவுள்ளது. 1818 என்ற அழைப்பு இலக்கத்துடன் தொடர்புடைய போதைப்பொருள் தேசிய சபைக்கான அலுவலகம் எதிர்வரும் 22ஆம் திகதி திறக்கப்படும்.
போதைப்பொருள் பிரச்சினை மிகவும் பாரதூரமான நிலையை அடைந்துள்ளது. இது சமூகத்துக்கு ஒரு பேரழிவை கொண்டுவருகிறது. இந்தப் பிரச்சினையை சமூகத்திலிருந்து அகற்ற வேண்டும் என்று அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் கருதுகிறோம் - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லிணக்க உறவுப்பயண இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.17
அனலைதீவுக்கு வருகைதந்திருந்த குருநாகல் மாவட்டத் தேசிய இளைஞர் மன்றங்களின் நல்லிணக்க உறவுப்பயண இளைஞர்களின் உறவுப் பரிமாற்ற வேலைத்திட்டத்தின் 2ஆம் நாள் நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. இதன்போது மர நடுகை மற்றும் அனலைதீவு, புளியந்தீவு, பருத்தீவு சுற்றுலா, பாரம்பரிய உணவான 'கூழ்' சுவைத்தல் மற்றும் குருநாகல் மாவட்டத்தின் இளைஞர் யுவதிகளின் கலாசார நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (க-41-9)

## பொருள்கள் பொதியிடல் தொழில்நுட்பப் பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.17
தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு உள்ளூர் உற்பத்திப்பொருள்கள் பொதியிடல் தொடர்பில் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எவ். சீ. சத்தியசோதி தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வளவாளர்களாக பிரதேச பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் இ. திலீபன், வவுனியா மாவட்ட விதாதா ஒருங்கிணைப்பாளர் கு. தபேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-9)





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஆலயங்களுக்கு உதவிகள்!

யாழ்ப்பாணம், நவ.17
சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஆலயங்களுக்கு ரூபா 6 இலட்சத்து 75ஆயிரம் பெறுமதியான உதவிகள் கடந்த 11 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டன. அதன்படி நுவரெலியா ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு வர்ணம் பூசுவதற்காக ரூபா 6 இலட்சம் பெறுமதியான வர்ணப் பூச்சுகளும் பதுளை கதிர்வேலாயுத ஆலயத்துக்கு புதிய கட்டுமானப் பணிகளுக்காக 75 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது.
குறித்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் மற்றும் ஆச்சிரமத் தொண்டர்கள் நேரடியாகச் சென்று இரு ஆலய நிர்வாகத்தினரிடமும் வழங்கிவைத்தனர். (ச-66-40)

# மாவீரர்களின் பெற்றோர் மன்னாரில் கௌரவிப்பு





மன்னார் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்புக் குழுவின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 95 மாவீரர்களின் பெற்றோர் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டது.
தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் கௌரவிக்கப்பட்டனர். மாவீரர்களின் நினைவாக உறவினர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (சு-56)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பொதுமக்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான கிராமிய சிறுவர் பாதுகாப்பினை மேம்படுத்தல் தொடர்பான சமுதாய விழிப்புணர்வுச் செயற்றிட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
இந்தச் செயற்றிட்டம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் நிர்வாக உத்தியோகத்தரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. (ச-41-9)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் சுமார் 200 குடும்பங்கள் பயனடைந்தனர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் கிளையால் நடமாடும் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டது. (க-19)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org